UDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC 563/2024 |
| | : | Prosecution P.W – 5 |
| NAME | : | ஜோசப்ராஜ் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 19.09.2024

**முதல் விசாரணை**

நான் வெய்காலிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டில் இருந்து வருகிறேன். அசா1 கிருஷ்ணன், அசா2 அந்தோணி ராஜ், அசா3 டேவிட் அமல்ராஜ், அசா4 செல்வராஜ் ஆகியோர்களை என்கு தெரியும். ஆஜர்எதிரிகளை எனக்கு தெரியும். 1 வது எதிரி மாயவன் ஆசிரியர், 2 வது எதிரி கோவில் நிர்வாகம்செய்தார். நான் ஆஜர் எதிரிகள் சீட்டு போடச்சொன்னதால் ரூபாய் 61000 வாரச்சீட்டில் ஒரு சீட்டு போட்டேன். அதை 123 வாரங்கள் செலுத்துவேண்டும். நான் 23 வாரங்கள் செலுத்தியுள்ளேன். ஒரு வாரத்திற்கு ரூபாய் 500 செலுத்தவேண்டும். நான் மொத்தம் ரூபாய் 7390 செலுத்தியுள்ளேன். அதற்கு பிறகு 2019 பொங்கலுக்கு முன்பு ஒரு வாரம் 10 நாட்கள் முன்பு ஆஜர்எதிரிகள் ஊரை விட்டு போய் விட்டார்கள் என்று சொன்னார்கள். நிறைய நபர்கள் சீட்டு போட்டார்கள். மொத்தம் 6 குரூப் சீட்டு நடத்தினார்கள். ஒரு சீட்டுக்கு 100

பேர் வரை சேர்வார்கள். அந்தோணி ராஜ், பூங்கொடி சூசை, டேவிட் அமல்ராஜ், செல்வராஜ், மற்றொரு அமல் ராஜ் ஆகியோர்களும் சீட்டு செலுத்தினார்கள். 28.12.2019 ம் தேதி சுமார் அந்த பொங்கலுக்கு பின்பு 9 மாதங்கள் கழித்து ஆஜர் எதிரிகள் ஊருக்கு வந்தார்கள் என்றம் பணம் கொடுக்கிறார்கள் என்றும் கிருஷ்ணன் பணத்தை கேட்கிறார் என்றும், காலை 7.00 மணி அளவில் கேட்கிறார் என்றும் கேள்விபட்டு நானும் போனேன். அப்போது எதிரிகள் இருவரும் நாங்கள் சீட்டு நடத்தவில்லை என்றும் யாரும் சீட்டு போடவில்லை என்றும் எவன் கேட்பான் என்றும் தேவிடியா மகன் என்றும் வாக்குவாதம் செய்தார்கள். எல்லோரும் கடையம் காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்தோம். காவல் நிலையத்தில் மாலை 7.00 மணி இருக்கும். கிருஷ்ணன் முன்நின்று புகார் கொடுத்தார். பணம் கிடைக்கவில்லை, போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1ம் எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை

நான் புகாரை படித்து பார்த்தேனா என்றால் ஆமாம். நான் புகாரை படித்து பார்த்த பின்புதான் அதில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரில் எத்தனை பேர் கையொப்பம் செய்தோம் என்றால் நான் கையொப்பம் செய்து விட்டு வீட்டுக்கு சென்றுவிட்டேன். நான் எத்தனை மணிக்கு புகாரில் கையொப்பம்செய்தேன் என்றால் சுமார் 7.00 மணிக்குள் ஊரில் வைத்து கையொப்பம் செய்தேன். எனது கையொப்பத்திற்கு முன்பு யார் எல்லாம் கையொப்பம் செய்தார்கள் என்றால் நிறைய பேர் கையொப்பம் போட்டிருந்தார்கள். அது யார் என்று எனக்கு தெரியவில்லை. நான் கையொப்பம் செய்த புகார்மனுவில் ரூபாய் 61000 சீட்டில் நான் 23 வாரங்கள் ரூபாய் 7390 செலுத்தினேன் என்றும் அது வரவேண்டியுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகார் மனுவில் டேவிட் அமல்ராஜ் மற்றும் செல்வராஜ் ஆகியோர் செலுத்திய சீட்டு விவரங்கள் மற்றும் தொகை விவரங்கள் குறிப்பிடபட்டிருந்தது என்றால் அதை நான் பார்க்கவில்லை. 9 மாதம் ஆஜர் எதிரிகள் இல்லை என்று சொல்லியுள்ள சமயத்தில் நான் மேல் அதிகாரியிடம் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. மற்ற நபர்கள் மேல்அதிகாரியிடம் அந்த சமயத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது. என்னை போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் தகராறு நடந்த அன்றே மாலை 5.00 மணிக்கு சென்று 7.00 மணிக்கு புகார்

கொடுத்தோம். அப்போது விசாரித்தார்கள் காவல் நிலையத்திற்குள் மூன்று நான்கு பேர் சென்றார்கள். ஒவ்வொரு ஏலத்திலும் ஏலக்கழிவுத்தொகை வேறு வேறாக இருக்கும் என்றால் சரிதான். ஒவ்வொரு வாரமும் நான் செலுத்திய தொகையை எழுதிவைத்திருப்பேன் என்றால் எழுதிவைத்திருப்பேன் அது எங்கு இருக்கிறது என்று ஞாபகம் இல்லை. நான் அந்த எழுதிய பேப்பரை போலிஸ்யிடம் கொடுத்தேன் என்றால் இல்லை. 6 மாதமாக நான் திருச்செந்துர் சென்றுவிட்டு திரும்ப வந்த பின்பு வீட்டை பாராமரித்து இருந்ததால்அந்த பேப்பர் துலைந்துவிட்டது. நான் ஆசிரியர் வேலைசெய்தேனா என்றால் இல்லை நான் தியேட்டர் ஆப்பரேட்டராக இருந்தேன். பணம் கேட்க சென்றதாக சொல்லியுள்ளதில் எங்கு சென்று கேட்டோம் என்றால் கோவில் முன்பு கேட்டோம். நான் சொல்வது போல் இந்த 1ம் எதிரி சீட்டு பணம் நடத்தி இருப்பது கிடையாது என்றாலும் நான் சீட்டு பணம் செலுத்தி இருப்பது கிடையாது என்றாலும் 9 மாத காலம் தலைமறைவாக இருந்தது கிடையாது என்றாலும் சரியல்ல.

இந்த 1ம் எதிரி மீது கிருஷ்ணன் கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் அவர்களுக்காக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. கிருஷ்ணன் தரப்பிற்கும் 1ம் எதிரிக்கும் மாயவன் கோவில் நிர்வாகம் சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருவதால் 1ம் எதிரியை மாயவன் கோவில் நிர்வாகத்தில் இருந்து நீக்க வேண்டும் என்பதற்காக அசா.1 கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் அவருக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எல்லா வாரங்களும் ஏலத்தில் கலந்துள்ளேன் என்றால் சரிதான். ஒவ்வொரு சீட்டிலும் 2வது வாரத்தில் உள்ள சீட்டு மாயவன் கோவிலுக்கு என்றால் சரிதான். கோவிலில் இருந்து சீட்டு நடத்தியதால்தான் 2வது சீட்டு கோவிலுக்கு என்றால் கோவில் பெயரை சொல்லிநடத்தியதால்தான் நம்பிக்கையின் பெயரில் சீட்டு போட்டோம் ஆனால் பணம் தரவில்லை. நான் எவ்வளவு தொகை ஏலம் கேட்டுள்ளேன் என்றால் நான் ஏலம் கேட்கவில்லை. ஏலம் கேட்ட நபருக்கு கழிவுத்தொகை போக மீதி பணத்தை கொடுத்துவிடுவார்கள் என்றால் சரிதான். ஏலம் எடுத்த நபர்கள் அதற்கு அடுத்த வாரத்திலிருந்து முழுத்தொகையையும் செலுத்த

வேண்டும் என்றால் சரிதான். சீட்டு நின்று போனதாக சொல்லியுள்ளதில் ஏற்கனவே சீட்டு எடுத்தவர்கள் அதற்கு பிறகு பணம் செலுத்தவில்லை என்றால் சரிதான். என்னுடன் சீட்டு போட்ட நபர்களுக்கு என்னைப்போல் 23 வாரங்கள் முடிந்திருக்கும் என்றால் சரிதான். நான் சீட்டு போட்ட கடைசி ரூபாய் 61000 குரூப்பில் அப்படித்தான் முடிந்திருக்கும். எப்போது சீட்டு ஆரம்பிக்கப்பட்டது என்றால் 2018ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மாதம் ஞாபகம் இல்லை. 23 சீட்டு செலுத்தியுள்ளேன். நான் சொல்வது போல முதல் விசாரணையில் சொன்னதுபோல் இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் இந்த எதிரியோ அவருக்கு வேண்டப்பட்டவரோ யாரும் தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தவில்லை என்றாலும் சரியல்ல. நான் எனக்கு ரூபாய் 7390 வரவேண்டியுள்ளது என்று தற்போதுதான் முதல்முதலாக சொல்கிறேன் என்றால் சரிதான்.

1ம் எதிரி தரப்பில் செய்யபட்ட குறுக்கு விசாரணை, 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளபட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC 563/2024 |
| | : | Prosecution P.W – 4 |
| NAME | : | செல்வராஜ் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 19.09.2024

**முதல் விசாரணை**

நான் வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடிசுற்றும் தொழில் செய்து வருகிறேன். அசா.1 கிருஷ்ணன், அசா.2 அந்தோணிராஜ், அசா.3 டேவிட் அமல்ராஜ் ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்கள் எங்கள் ஊர்காரர்கள். அவர்களும் ஆஜர் எதிரிகளிடம் சீட்டு போட்டார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்,அவர்கள் எனது ஊர்காரர்கள். ஆஜர் எதிரிகள் வார சீட்டு போட சொன்னார்கள். நான் சீட்டு போட்டேன். ரூ.60000 சீட்டில் இரண்டும், ரூ.33000 சீட்டில் இரண்டும் போட்டேன். ரூ. 33000 சீட்டில் இரண்டு சீட்டுகளையும் 72 வாரம் செலுத்தினேன். ரூ.32100 செலுத்தினேன். ரூ.60000 சீட்டில் இரண்டு சீட்டுகளையும் 38 வாரங்கள் செலுத்தினேன். ரூ. 23480 செலுத்தினேன். 2019 ம் ஆண்டு தை மாதத்தில் ஆஜர் எதிரிகள் இரண்டு பேரும்இல்லை. அதற்கு பிறகு 10 மாதங்கள் கழித்து 10 வது மாதம் 22 ம் தேதி காலையில் கிருஷ்ணன் ஆஜர் எதிரிகளிடம் பணம் கேட்க அவர்கள் வீட்டிற்கு சென்றிருக்கிறார். நானும் அதை தெரிந்து பணம் கேட்க போனனேன். ஆஜர் எதிரிகள் செறிக்குமகனே, தேவுடியாமகனே என்று ஏசினார்கள்.

சீட்டு போட்டதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது என்று ஏசினார்கள். அதற்கு பிறகு மாலை 5.00 மணியளவில் கிருஷ்ணன் புகார் கொடுக்க சென்றார். ஆஜர் எதிரிகள் பணத்தை திருப்பி தரவில்லை. நாங்களும் கிருஷ்ணன் உடன் காவல் நிலையம் சென்றோம்.

எங்கள் ஊரில் நிறைய நபர்கள் சீட்டு போட்டார்கள். அதில் பக்கத்தில் உள்ள ஆட்களை எனக்கு தெரியும். பணத்தை கேட்கும் போது ராகவன், செல்வம், ராஜம்மாள் மற்றும் நிறைய நபர்கள் வந்திருந்தார்கள். ஆஜர் எதிரிகள் யாருக்கும் பணத்தை திருப்பி கொடுக்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கும் போது சென்றிருந்தேனா என்றால் ஆமாம். புகாரில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது எனக்கு படிக்க தெரியாது. புகாரில் யாரெல்லாம் கையொப்பம் செய்து கொடுத்தார்கள் என்றால் அதை நான் பார்க்கவில்லை. புகாரை எங்கு வைத்து எழுதினார்கள் என்றால் காவல் நிலையம் சென்றேன். எங்கு வைத்து எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. 10 மாதங்களில் சீட்டு நடத்தவில்லை என்று காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் முன்பு எஸ்பி அலுவலகத்தில் கலெக்டர் அலுவலகத்தில் புகார் கொடுத்தேனா என்றால் நான் போகவில்லை என் மனைவி போனார். எனக்கு சீட்டு பணம் திருப்பி தரவில்லை என்று நான் தனிப்பட்ட முறையில் மேல் அதிகாரியிடம் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது மனைவி சீட்டு போட்டுள்ளாரா என்றால் நான் தான் சீட்டு போட்டுள்ளேன். காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் முன்பு என்னை போலிசார் எத்தனை தடவை விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுக்கும் முன்பு ஒரு முறையும் புகார் கொடுத்த பின்பு ஒரு முறையும் விசாரித்தார்கள். புகார் கொடுக்கும் முன்பு எவ்வுளவு நாட்களுக்கு முன்பு என்னை விசாரித்தார்கள் என்றால் சீட்டு நடத்தவில்லை என்பதால் ஆஜர் எதிரிகள் ஓடிவிட்டார்கள் என்பதால் அப்போது வந்து விசாரித்தார்கள்.

புகார் கொடுத்த பின்பு எத்தனை நாட்கள் கழித்து என்னை விசாரித்தார்கள் என்றால் கொஞ்ச நாட்கள் கழித்து என்னை விசாரித்தார்கள். நான் போலிசார் விசாரணையில் எவ்வுளவு சீட்டில் எவ்வுளவு பணம் செலுத்தினேன் என்று list கொடுத்தேன் என்றால் இல்லை. வாய்மொழியாக சொன்னேன். நான் எதிரிகள் வீட்டிற்கு சென்றதாக சொல்லி உள்ளதில் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் காலை 7.00 மணிக்கு சென்றேன்.எவ்வுளவு நேரம் அங்கே இருந்தேன் என்றால் அரை மணி நேரம்இருந்திருப்பேன். மாயவன் கோயிலுக்கும் 1ம் எதிரி வீட்டிற்கும் எவ்வுளவு துரம் என்றால் கோவிலுக்கு எதிர்த்தாற் போல்

உள்ளது. மாயவநாதன் வீடு மாயவன் கோயிலில் இருந்து எவ்வுளவு தூரத்தில் உள்ளது என்றால் ஒரு தெரு தள்ளி உள்ளது. புகார் மனுவில் எத்தனை பேர் கையொப்பம் செய்து கொடுத்தோம் என்றால் நிறைய பேர் சென்றோம். யாரெல்லாம் கையொப்பம் செய்தார் என்று எனக்கு தெரியாது. நான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம்.

புகாரில் நான் எத்தனை சீட்டுகளுக்கு எவ்வுளவு வாரம் பணம் செலுத்தினேன் என்றும் அந்த பணம் திருப்பி தரவில்லை என்றும் குறிப்பிடபட்டுள்ளது என்றால் ஆமாம். எதிரிகள் எத்தனை சீட்டுகள் நடத்தினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சீட்டு ஏலம் நடக்கும் போது நான் கலந்து கொண்டேனா என்றால் எனக்கு சீட்டு தேவை என்றால் நான் போவேன். ஏலம் நிறைய தொகை போனால் நான் எடுக்காமல் வந்து விடுவேன். ஏலம் எடுத்த நபர்களுக்கு எப்படி பணம் கொடுப்பார்கள் என்று விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆஜர் 1ம் எதிரி தலைமறைவாகிவிட்டார் என்று சொல்லி உள்ளதில் எவ்வுளவு நாட்கள் தலைமறைவாக இருந்தார் என்றால் சுமார் 10 மாதங்கள் வரவில்லை. கலெக்டரிடம் புகார் கொடுத்த பிறகு எதிரியை காவல் நிலையத்தில் விசாரித்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் இந்த 1ம் எதிரி சீட்டு பணம் நடத்தி இருப்பது கிடையாது என்றாலும் நான் சீட்டு பணம் செலுத்தி இருப்பது கிடையாது என்றாலும் 10 மாத காலம் தலைமறைவாக இருந்தது கிடையாது என்றாலும் சரியல்ல.

இந்த 1ம் எதிரி மீது கிருஷ்ணன் கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் அவர்களுக்காக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. கிருஷ்ணன் தரப்பிற்கும் 1ம் எதிரிக்கும் மாயவன் கோவில் நிர்வாகம் சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருவதால் 1ம் எதிரியை மாயவன் கோவில் நிர்வாகத்தில் இருந்து நீக்க வேண்டும் என்பதற்காக அசா.1 கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் அவருக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் மேற்படி சீட்டுகளில் பணம் செலுத்தியதாக சொல்லி உள்ள தொகை விவரங்களை நான் தற்போது தான் முதன்முறையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரித்த போது சொல்லி இருந்தேன். நான் மாயவன் கோவில் வரிதாரரா என்றால் இல்லை. அது நாடார் கோவில். நான் மருத்துவர் சமுதாயம். 33000 சீட்டில் எத்தனை வாரங்கள் என்றால் 111 வாரம். ரூபாய் 33000 சீட்டில் எத்தனை வாரங்கள் முடிந்துள்ளது என்றால் 72 வாரம் பணம் செலுத்தி உள்ளேன். ரூபாய்

60000 சீட்டில் எத்தனை வாரங்கள் என்றால் 121 வாரங்கள். ரூபாய் 60000 சீட்டில் எத்தனை வாரங்கள் முடிந்துள்ளது என்றால் 38 வாரங்கள் செலுத்தி உள்ளேன். ஒவ்வொரு சீட்டிலும் இரண்டாவது சீட்டு மாயவன் கோவிலுக்குத்தான் என்றால் சரிதான். கோவிலில் இருந்து சீட்டு நடத்துவதால்தான் அந்த தொகையை கோவிலுக்கு எடுக்கிறார்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு வாரமும் ஏலக்கழிவு போக மீதி பணத்தைதான் செலுத்தவேண்டும் என்றால் சரிதான். ஏலக்கழிவு என்பது ஒவ்வொரு சீட்டு தொகையிலும் உள்ள அனைத்து சீட்டுகளுக்கும் பொருந்தும் என்றால் சரிதான். ரூபாய் 33000 சீட்டில் நான் இரண்டு சீட்டுகளுக்கு ரூபாய் 600 செலுத்துவேன் என்றால் சரிதான். ரூபாய் 60000 சீட்டில் நான் இரண்டு சீட்டுகளுக்கு ரூபாய் 1000 செலுத்துவேன் என்றால் சரிதான். கழிவுத்தொகையை திருப்பி தந்துவிடுவார்கள் என்றால் சரிதான். ஏலம் எடுத்த நபர்கள் ஏலம் எடுத்த பின்பு முழு சீட்டு தொகையையும் செலுத்த வேண்டுமென்றால் சரிதான். ஒரே நபர் நான்கு, ஐந்து சீட்டு போட்டிருந்தால் ஒரு சீட்டு எடுத்த பின்பு அடுத்த வாரம் அடுத்த சீட்டு எடுக்க முடியுமா என்றால் அந்த நபர் அதற்கு முன்பு சீட்டு பணம்செலுத்தும் நடத்தையை பொறுத்து கொடுப்பார்கள். நான்கு சீட்டு போட்ட நபர்களுக்கு அடுத்த அடுத்த வாரங்களில் இரண்டு சீட்டுகள் கொடுப்பார்கள் என்றால் சரிதான். நான் எந்த வாரத்தில் இருந்து முழுத்தொகையை கழிவு இல்லாமல் செலுத்தியுள்ளேன் என்றால் நான் சீட்டு எடுக்கவில்லை என்பதால் எனக்கு கழிவுத்தொகையை திருப்பி தந்துவிடுவார்கள். நான் ஏலத்தில் கலந்துகொள்வதால் சீட்டு போட்ட எல்லோரையும் எனக்கு தெரியும் என்றால் சீட்டு போட்ட எல்லோரையும் எனக்கு தெரியாது. நான் சீட்டு கேட்க வேண்டுமென்று செல்லும்போது அங்கு ஒரு சிலர் தான் இருப்பார்கள் நான் பணம் கொடுத்துவிட்டு வந்து விடுவேன். யார் ஏலம் எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கழிவுத்தொகையை எனக்கு சொன்னதால்தான் நான் எனக்கு வரவேண்டிய தொகையை சொல்கிறேன் என்றால் கழிவுத்தொகையை திருப்பி கொடுத்துவிடுவார்கள் அதை வைத்து சொல்கிறேன். நான் எழுதிவைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் அனுமானத்தில் சொல்கிறேன் என்றால் ஆமாம். ரூபாய் 33000 சீட்டில் ஏலம் அதிகபட்சம் எவ்வளவு போனது என்றால் ரூபாய் 10000 கழிவுவரை கேட்டிருக்கிறார்கள். நான் ரூபாய் 10000 கழிவுவரை கேட்டிருக்கிறேன். அதை எடுத்த நபர் எவ்வளவு ரூபாய்க்கு எடுத்தார்கள் என்றால் எனக்கு அதற்கு மேல் கழிக்க முடியாது என்பதால் நான் வந்து விட்டேன் அதனால் எனக்கு தெரியவில்லை. ஏலச்சீட்டு எடுத்த நபருக்கு கழிவு போக மீதித்தொகையை உடனே கொடுத்துவிடுவார்கள் என்றால் கணக்கு எல்லாம் பார்த்துவிட்டு

கொடுத்துவிடுவார்கள். ஏலம் எடுத்த நபர் அதற்கு அடுத்த சீட்டில்இருந்து முழுத்தொகையை செலுத்தவேண்டும் என்றால் சரிதான். ஏலம் நடப்பதற்கு முன்பு அந்த வாரத்தின் முழு சீட்டு தொகையை செலுத்துவோம் என்றால் சரிதான், கழிவுத்தொகையை ஒரு சில நபர்கள் திருப்பி வாங்காமல் அடுத்த வாரத்திற்கு விட்டுச்செல்வார்கள். இந்த விவரங்களை போலிசார் விசாரணையின்போது சொன்னேன் என்றால் சரிதான். சீட்டு நின்று போனதாக சொல்லியுள்ளதில் அதற்கு முன்பு ஏலம் எடுத்த நபர்களும் அந்த நின்று போனதற்கு பிறகு சீட்டு தொகை செலுத்தவில்லை என்றால் சரிதான். சீட்டு நடக்கவில்லை என்பதால் எப்படி செலுத்துவார்கள். என்னை போலத்தான் சீட்டு போட்ட நபர்களுக்கும் சீட்டு எண்ணிக்கை முடிந்துருக்கும் என்றால் ஒவ்வொரு சீட்டுக்கும் அதே அளவு முடிந்திருக்கும். நான் பீடி சுற்றுவதால் வாரம் ரூபாய் 1600 செலுத்துவதற்கு எனக்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. நான் வாரத்திற்கு ரூபாய் 4000 வருமானம் பெறுவேன். நான் கழிவுத்தொகை போக மீதித்தொகைதான் செலுத்தினேன் என்றால் சரிதான். நான் அந்த கழிவுத்தொகையை முன் வாரத்தில் வாங்காமல் விட்டு வைப்பதால் அடுத்த வாரத்திற்கு அந்த கழிவுத்தொகை அளவு போக மீதித்தொகையை செலுத்துவேன். போலிசார் என்னை தனியாக விசாரித்தார்களா என்றால் தனியாக விசாரிக்க வில்லை என் வீட்டில் வந்து விசாரித்தார்கள். நான் சொல்வது போல முதல் விசாரணையில் சொன்னதுபோல் இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் இந்த எதிரியோ அவருக்கு வேண்டப்பட்டவரோ யாரும் தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தவில்லை என்றாலும் சரியல்ல.

1ம் எதிரி தரப்பில் செய்யபட்ட குறுக்கு விசாரணை, 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளபட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 3 |
| NAME | : | டேவிட் அமல்ராஜ் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 19.09.2024

**முதல் விசாரணை**

நான் வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கடைவைத்து தொழில் செய்து வருகிறேன். அசா.1 கிருஷ்ணனை எனக்கு தெரியும். அசா.2 அந்தோணிராஜ் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் அவர்கள் எங்கள் ஊர் கோயிலில் சீட்டு நடத்தினார்கள். நான் ஆஜர் எதிரிகளிடம் சீட்டு போட்டிருந்தேன். ரூ. 61000 சீட்டும் ரூ.50000 சீட்டும் போட்டிருந்தேன். அது வாரசீட்டுகள். அந்த சீட்டுகளுக்கு வாரம் ரூ. 500 செலுத்த வேண்டும் நான் மேற்படி சீட்டுகளில் ஒவ்வொரு சீட்டு போட்டிருந்தேன். ரூ.61000 சீட்டில் 123 வாரங்கள் பணம் செலுத்த வேண்டும். நான் 23 வாரங்கள் பணம் மொத்தம் ரூ. 7380 செலுத்தி உள்ளேன். ரூ. 50000 சீட்டில் நான் 42 வாரங்கள் பணம் மொத்தம் ரூ- 17380 செலுத்தி உள்ளேன். 2019ம் ஆண்டு பொங்கல் வரை பணம் செலுத்தினேன். அதற்கு பிறகு ஆஜர் எதிரிகள் சீட்டு நடத்தவில்லை. நாங்கள் ஆஜர் எதிரிகளிடம் கேட்ட போது அவங்கள் பணம் தரவில்லை. நான் சீட்டு போட்ட சுமார் 50 பேர்கள் சென்று கேட்டோம். ஆஜர் எதிரிகளிடம் கேட்டு பார்த்தும் பணம் தருவோம் என்று அவர்கள்

சொல்லவில்லை. ஆஜர் எதிரிகள் கொஞ்ச நாட்களாக ஊரில் இல்லை.

2019 அக்டோம்பர் மாதம் 22ம்தேதி ஆஜர் எதிரிகள் ஊருக்கு வந்துள்ளதாக சொன்னார்கள். காலை 7.00 மணிக்கு கிருஷ்ணன் மற்றும் நபர்கள் பணம் கேட்டதாக ஊரில் சொல்லியதால் நாங்களும் சென்று கேட்டோம். அப்போதும் பணம் தரவில்லை ஆஜர் எதிரிகள் தேவுடியா என்று பேசினார்கள். நாங்கள் வந்துவிட்டோம். மாலை 5.00 மணியளவில் எல்லாரும் காவல் நிலையம் சென்றோம். நானும் காவல் நிலையம் சென்றேன். நான் காவல் நிலையத்தில் வெளியே நின்றிருந்தேன். கிருஷ்ணனும் ராஜாமணி நாடாரும் அந்தோணி ராஜீம் உள்ளே சென்று புகார் கொடுத்தார்கள். எனது பணத்தை திருப்பி தரவில்லை. பணத்தை நிறைய தடவை கேட்ட போதும் ஆஜர் எதிரிகள் தரவில்லை. ஆஜர் எதிரிகளிடம் பணம் கேட்டபோது நீங்கள் செய்வதை செய்து பாருங்கள் என்று சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள் நான் நடந்ததை சொன்னேன்.

1ம்எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

என்னை போலிசார் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுத்த அன்று வந்து காவல் நிலையத்தின் வெளியே வைத்து விசாரித்தார்கள். நான் போலிசாரிடம் நான் பணம் கட்டியதாக சொன்ன விவரங்களை எழுதி வைத்து ஒப்படைத்தேனா என்றால் இல்லை. நான் வாய்மொழியாக சொன்னேன். நான் சீட்டு கட்டிய பணத்தை எழுதி வைக்கவில்லை .அவர்கள் ரசீது தரவில்லை. நம்பிக்கையின் பேரில் செலுத்தினேன். ஆஜர் 1ம் எதிரி எவ்வுளவு நாட்களாக ஊரில் இல்லை என்றால் 15 நாள் முதல் 1 மாதம் இருக்கும். ஆஜர் 1ம் எதிரி ஆசிரியர் வேலை செய்கிறாரா என்றால் ஆமாம். ஆஜர் 1ம்எதிரி 1 மாதம் ஊரில் இல்லை என்று சொன்ன காலத்தில் அவர் பள்ளிகூடம் சென்றாரா என்றால அது எனக்கு தெரியாது ஆனால் அவர் ஊரில் இல்லை. நான் யாரிடம் சீட்டு போட்டேன் என்றால் மாயவநாதனிடம் போட்டேன். ஆஜர் எதிரிகள் இரண்டு பேரும் தான் சீட்டு நடத்தினார்கள்.

ஆஜர் எதிரிகள் சீட்டு நடத்தினார்கள் என்று சொல்லி உள்ளதில் நான் மாயவநாதனிடம் இரண்டு சீட்டுகள் போட்டேன் என்று சொல்லி உள்ள நிலையில் 1ம் எதிரி மாயவன் எத்தனை ரூபாய் சீட்டு நடத்தினார் என்றால் நான் இரண்டு சீட்டுகள் தான் மாயவநாதனிடம் போட்டேன் மாயவன் 10 சீட்டுகள் நடத்தினார்.அதன் தொகை எனக்கு தெரியாது. மாயவநாதன் நான் போட்ட இரண்டு சீட்டுகள் தவிர வேறு எத்தனை சீட்டுகள் நடத்தினார் என்றால் ரூபாய் 33000, ரூ,60000, ரூ,1 லட்சம் ஆகிய சீட்டுகள் நடத்தினார். ரூ.61000 சீட்டீல் எத்தனை வாரங்கள் என்றால் 123 வாரங்கள். ரூ.50000 சீட்டில் மொத்தம் எத்தனை

சீட்டுகள் என்றால் 101 வாரங்கள். நாங்கள் எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்றோம் என்றால் மாலை 5.00 மணியளவில் சென்றோம். எத்தனை மணிக்கு புகார் கொடுத்தோம் என்றால் நாங்கள் போன உடன் அரைமணி நேரத்தில் அவர்கள் புகார் கொடுத்தார்கள்.

புகாரை யார் எழுதினார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் புகாரை படித்து பார்த்தேனா என்றால் நான் அதை படித்து பார்க்கவில்லை. நான் ரூ.61000 சீட்டில் 23 வாரங்களும் ரூ.50000 சீட்டில் 42 வாரங்களும் செலுத்தினேன் என்று சொல்லி உள்ள விவரம் புகாரில் குறிப்பிடபட்டதா என்றால் நான் சொல்லி குறிப்பிட்டார்கள். என்னை போல மற்ற நபர்கள் செலுத்திய சீட்டு தொகை மற்றும் சீட்டு விவரங்கள் அவர்களால் சொல்லபட்டு புகாரில் எழுதபட்டது என்றால ஆமாம். நான் எத்தனை மணிக்கு சம்பவம் நடந்ததாக சொன்ன இடத்திற்கு சென்றேன் என்றால் எல்லாரும் 7.00 மணிக்கு போனாாக்ள் நான் 7.15 க்கு போனேன் ஒவ்வொருவரும் கேள்விபட்டுபோனோம். ரூ. 61000 சீட்டு எந்த வருடம் எந்த மாதம் ஆரம்பிக்கபட்டது என்றால் 2019 பொங்கலில் நிப்பாட்டினார்கள் நான் அதற்கு முன்பு 23 வாரங்கள் செலுத்தி உள்ளேன். ரூ.50000 சீட்டில் சீட்டு எந்த வருடம் எந்த மாதம் ஆரம்பிக்கபட்டது என்றால் 2019 பொங்கலில் நிப்பாட்டினார்கள் நான் அதற்கு முன்பு 42 வாரங்கள் செலுத்தி உள்ளேன்.

எந்த வருடத்தில் இரண்டு சீட்டுகளும் ஆரம்பிக்கபட்டது என்று என்னால் சொல்ல இயலாது என்றால் நான் நம்பிக்கையில் செலுத்தினேன். எந்த வருடத்தில் 2 சீட்டுகளும் ஆரம்பிக்கபட்டது என்றால் 2019 பொங்கலுக்கு நிறுத்திவிட்டார்கள். அதற்கு முன்பு செலுத்தினேன். எந்த வருடம் சீட்டு ஆரம்பிக்கபட்டது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் 2018 ம் ஆண்டு நான் சீட்டு போட்டேன். எந்த மாதம் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் நான் நம்பிக்கையில் போட்டேன். நான் போட்ட சீட்டு பணங்களை எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. என்னுடன் ரூ.61000 சீட்டில் பணம் செலுத்தியவர்கள் எத்தனை பேர் எடுத்தார்கள் என்றால் ஏலம் கேட்டவர்கள் எடுத்திருப்பார்கள். ஏலம் எடுத்தவர்களுக்கும் ஏலம் எடுக்காதவர்களுக்கும் கழிவு உண்டா என்றால் ஏலம் எடுததவர்களுக்கு கழிவு கிடையாது. ஏலம் எடுக்காதவர்களுக்கு கழிவு உண்டு. மாயவன் கோயிலுக்கு இரண்டு தலைவர்களா என்றால் இரண்டு பொறுப்பாளர்கள். அதில் ஒரு பொறுப்பாளர் 1 வது எதிரி மாயவன் என்றால் சரிதான். மற்றொரு பொறுப்பாளர் யார் என்றால் 2 ம் எதிரி மாயவநாதன் ஆகும். நான் எத்தனை வருடங்களாக சீட்டு பணம் செலுத்தி வருகிறேன் என்றால் இரண்டு, மூன்று வருடங்கள் செலுத்தி வருகிறேன்.

மகேஷ் மாயவன் சீட்டு நடத்தினார் என்றால் அவர் நடத்தவில்லை. நான் சொல்வது போல் நான் சொன்ன தேதியில் எதிரிகளிடம் நானோ, மற்றவர்களோ சீட்டு பணம் கேட்டது கிடையாது என்றாலும் எதிரிகள் ஆபாசமாக எங்களை பேசியது கிடையாது என்றாலும் சரியல்ல. அசா.1 கொடுத்த பொய் புகாருக்கு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தம இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வவது போல் எந்த சீட்டும் எதிரிகள் நடத்தியது இல்லை என்றால் சரியல்ல. மாயவன் கோவில் தலைவராக இந்த 1ம் எதிரி இருப்பதால் அவரை அந்த பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்பதற்காக அவர் மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. கோயிலுக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை ஆஜர் 1ம் எதிரி தலைவராக இருப்பதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. நான் கிறிஸ்துவரா என்றால் ஆமாம். நான் எப்போது மதம் மாறினேன் என்றால் எனது பூட்டனார் காலத்தில் இருந்து கிறிஸ்தவர்கள்.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நாங்கள் புகார் கொடுக்க சென்றதாக சொல்லி உள்ளதில் நானும் மற்றவர்களும் கையொப்பம் செய்து புகார் கொடுத்தோம் என்றால் அந்த 3பேர் மட்டும் தான் கையொப்பம் செய்தார்கள் நாங்கள் கையொப்பம் செய்யிவ்லலை. அந்த 3பேர் யார் என்றால் ராஜாமணி நாடார், அந்தோணி ராஜ், கிருஷ்ணன். போலிசார் என்னை தனிபட்ட முறையில் விசாரித்தார்களா என்றால் எல்லாரையும் விசாரித்தார்கள் என்னையும் விசாரித்தார்கள். ஒவ்வொருஏலத்திலும கழிவு தொகை போக மீதி தொகையை செலுத்துவோம் என்றால் நாங்கள் பணம் செலுத்தி விடுவோம் ஏலம் கேட்ட பிறகு அந்த கழிவு தொகையை எங்களிடம் கொடுப்பார்கள். ஏலம் எடுத்த நபர்கள் அதற்கு பிறகு கழிவு இல்லாமல் முழு தொகை செலுத்த வேண்டும என்றால் சரிதான். முழு தொகை என்பது வாரத்திற்கு ரூ.500 செலுத்த வேண்டும் என்றால் ஒவ்வொரு சீட்டிற்கும் முழு தொகை செலுத்த வேண்டும. என்னை போல மற்ற நபர்கள் ரூ.61000 மற்றும் ரூ.50000 சீட்டில் நிறைய சீட்டுகள் போட்டிருப்பார்கள் என்றால் சரிதான். ஒரே தொகை சீட்டீல் நான்கு ஐந்து சீட்டு போட்டவர்கள் அடுத்து அடுத்து அதை எடுக்கலாமா என்றால் எடுக்க முடியாது நிர்வாகம் நினைத்தால் கொடுக்கலாம்.

நான் எத்தனை சீட்டுகள் முழு வார தொகை செலுத்தினேன் என்றால் அனைத்து சீட்டுகளிலும் முழு வார தொகை செலுத்த வேண்டும் நான் செலுத்தினேன் ஏலம் முடிந்தவுடன் கழிவு தந்தார்கள். நான் ரூ.50000 சீட்டில் எத்தனையாவது சீட்டு எடுததேன்

என்றால் நான் எடுக்கவில்லை. நான் எல்லா வாரமும் ஏலத்தில் கலந்து கொள்வேனா என்றால் சில வாரங்கள் நேரில் செல்வேன். சில வாரங்கள் நேரில் செல்ல மாட்டேன். பணம் கொடுப்பேன். இரண்டவாது சீட்டு யாருக்கு என்றால் நடத்துபவர்களுக்கு. அது மாயவன் கோயிலுக்கு என்றால் ஆமாம். அதனால் தான் சீட்டு கோயிலில் வைத்து நடந்தது என்றால் ஆமாம். அதனால் தான் கோயில் பெயரில் நடந்தது. ஏலத்தில் நான் கலந்து கொள்வதால் மற்ற சீட்டு போட்ட நபர்களை எனக்கு தெரியும் என்றால் ஆமாம். பத்து பதினைந்து பேர்களை எனக்கு நன்றாக தெரியும். ஒவ்வொரு வாரமும் எவ்வுளவு கழிவு போனது என்று எனக்கு தெரியும் என்றால் ஆமாம். அதனால் தான் நான் எவ்வுளவு தொகை என்று சொல்கிறேன் என்றால் ஆமாம். அதை நான் குறித்து வைத்துள்ளேன் என்றால் உத்ததேசமாக கேட்டு தெரிந்து கொண்டேன். நான் நிறைய இது குறித்து வைக்கவில்லை எத்தனை வாரம் என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஒவ்வொரு வாரமும் எவ்வுளவு கழிவு என்று எனக்கு தெரியும் என்பதால் தான் நான் செலுத்திய தொகையை சொல்கிறேன் என்றால் ஒவ்வொரு வாரமும் வித்தியாசப்படும்.

ரூ.61000 சீட்டில் எவ்வுளவு ஏலம் போகும் என்றால் அது அந்த நேரத்தை பொறுத்து போகும். ரூ.15000 வரை கழிவு தள்ளி போய் இருக்கிறது. ரூ.50000 சீட்டில் எவ்வுளவு கழிவு தள்ளி போயிருக்கிறது என்றால் அது தற்போது சொல்ல இயலவில்லை. வாரத்தில் ஏலம் கேட்கும் நபர் எவ்வுளவு அதிக தொகை ஏலம் கேட்கிறாரோ அதை கழிவு தொகையாக கணக்கு செய்வார்கள் என்றால் சரிதான். அந்த கழிவு போக மீதி பணத்தை ஏலம் கேட்ட நபருக்கு உடனடியாக கொடுப்பார்கள் என்றால் சரிதான். ஏலம் விடுவதற்கு முன்பு அந்த சீட்டின் முழு வார தொகையை செலுத்தி விடவேண்டும் என்றால் சரிதான். முழு வார சீட்டு தொகையை செலுத்திய நபர்கள் அந்த கழிவு தொகையை உடனே திருப்பி வாங்காமல் மறு வாரத்திற்கு வைத்து கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டு செல்வார்கள் என்றால் சரிதான். ஏலம் எடுத்த நபர்கள் ஏலசீட்டு நின்ற பிறகு பணம் செலுத்தவில்லை என்றால் அது ஆஜர் எதிரிகளுக்கு தான் தெரியும்.

ரூ.61000 சீட்டில் நான் செலுத்தியதாக சொல்லும் 23 வாரங்கள் தான் எல்லாருக்கும் முடிந்திருக்கும் என்றால் சரிதான். ரூ.50000 சீட்டில் நான் செலுத்தியதாக சொல்லும் 42 வாரங்கள் தான் எல்லாருக்கும் முடிந்திருக்கும் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாக சொல்லும் முன்பு எஸ்பி அலுவலகத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் நான் போகவில்லை. நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்னது போல் வழக்கிற்கும் இரண்டாம் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை

என்றால் சரியல்ல. இரண்டாம் எதிரியோ அவருக்கு வேண்டபட்டவரோ யாரும் தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தவில்லை என்றால் சரியல்ல இந்த வழக்கிற்கும் இரண்டாம் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

1ம் எதிரி தரப்பில் செய்யபட்ட குறுக்கு விசாரணை, 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளபட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi